DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.43/2019**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சாவித்திரி | Caste: | |
| Father's Name: | போஸ் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.11.2024.

(5–ஆவது எதிரி ஆஜர். 1,2,3,4,6,7,8 எதிரிகள் ஆஜர் இல்லை பி.என்.எஸ்.எஸ் பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் தெற்குதெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பறையர் சாதியை சேர்ந்தவர். சாட்சி மதுரைவீரன் என்னுடைய மாமா. சாட்சி முனியசாமி என் மாமா மகன். சாட்சிகள் சுகுணாபாரதி, செந்தூர்பாண்டி, பாலமுருகன் ஆகியோரை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள். எதிரிகளை தெரியும், நேரில் பார்த்தால் அடையாளம் காட்டமுடியும். எதிரிகளின் சாதியை தெரியும். பாலகிருஷ்ணன், லதா, அஜித் ஆகியோர் மறவர் சாதியை சேர்ந்தவர்கள். மற்றவர்கள் அகமுடையார் சாதியை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரி பெயர் பாலகிருஷ்ணன். 17.09.2017 அன்று மாலை 4 மணிக்கு நானும், சுகுணாபாரதியும் எங்கள் வீட்டிலிருந்து கடைக்கு போனோம். பார்த்திபனூரில் புதுதெரு வழியாக கடைத்தெருவிற்கு போய்கொண்டிருந்தபோது, அங்கிருந்த ஒரு கோவில் முன்னாடி எதிரிகள்

சரவணன், அஜித், வினோத், முத்துபாண்டி ஆகியோர் நின்றுகொண்டிருந்தார்கள். வா கருவக்காட்டுக்குள்ள போகலாம் என்று சரவணன் என்னை பார்த்து கேலி செய்தார். அதனால் கடைக்கு போகாமல் வீட்டிற்கு போய் சொல்லலாம் என்று நாங்கள் இரண்டு பேரும் வீட்டிற்கு போனோம். அப்போது வீட்டில் அப்பா, அம்மா இல்லை அதனால் மாமா மதுரைவீரனிடமும், அவருடைய மகன் முனியசாமியிடமும் நடந்த விவரத்தை சொன்னோம். நாங்கள் சொன்னவுடன் வாங்க போய் கேட்கலாம் என்று சொல்லி எங்களை அவர்கள் அந்த கேலி செய்த இடத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு போனபோது மாலை 5 மணி இருக்கும். அந்த இடத்தில் சரவணன், அஜித், வினோத், முத்துபாண்டி ஆகியோர் இருந்தார்கள். எதற்கு கிண்டல் பண்ணிங்க என்று மாமா மதுரைவீரன் எதிரி சரவணனை பார்த்து கேட்டார். அதற்கு அவர் நாங்கள் அப்படிதான்டா கிண்டல் செய்வோம், பற பயலே தேவுடியா பயலே என்று திட்டினார். எதிரி சரவணன் என் மாமாவின் இடது கன்னத்தில் அறைந்து விட்டார். என் மாமா பையன் முனியசாமியின் இடது கன்னத்தில் எதிரி முத்துபாண்டி அடித்துவிட்டார். எதிரி அஜித் முள்ளுகம்பால் முனியசாமியின் இடதுபக்க தோள்பட்டையில் அடித்தார். எதிரி வினோத் முள்ளுகம்பை எடுத்து என் மாமா மதுரைவீரனின் முதுகில் அடித்தார். சத்தம் கேட்டு அந்த இடத்திற்கு எதிரிகள் லதா, பாலகிருஷ்ணன், மாரீஸ்வரி மற்றும் மகேஸ்வரி அந்த இடத்திற்கு வந்தார்கள். பற பயல்கள் எல்லாம் இங்கு வந்து கேட்ககூடாது, இந்த பற பயல்களை அடிங்கடா என்று ஆஜர் எதிரி பாலகிருஷ்ணன் சொன்னார். எதிரி பாலகிருஷ்ணன் வீட்டு ஓட்டால் என் மாமா மதுரைவீரனின் வலதுபக்க தோள்பட்டையில் அடித்தார். எதிரிகள் லதா, மாரீஸ்வரி, மகேஸ்வரி ஆகியோர் துடைப்பகட்டையால் என் மாமாவையும், மாமா பையனையும் அடித்தார்கள்.

அதன் பிறகு பாலமுருகன், செந்தூர்பாண்டி, மாரிமுத்து ஆகியோர் வந்து விலக்கிவிட்டார்கள். என் மாமாவுக்கும், மாமா பையனுக்கும் காயம் ஏற்பட்டது. அதனால் ஒரு ஆட்டோவில் அவர்களை பரமக்குடி GH க்கு அனுப்பி வைத்தோம். பாலகிருஷ்ணன் அடித்த ஓட்டை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஓடுதான் அது.(சா.பொ.1 வரிசையாக குறியிடப்பட்டுள்ள ஓட்டுத்துண்டுகளை பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்.) இது சம்பந்தமாக பரமக்குடி DSP என்னை விசாரித்தார்.

**5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:—**

சம்பவ காலத்தில் நான் படித்து முடித்துவிட்டு வீட்டில் இருந்தேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சம்பவ காலத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக பத்தாம் வகுப்பு படித்து முடித்தேன். எனக்கு சொந்த ஊர் புழுதிகுளம். புழுதிகுளத்திலிருந்து பார்த்திபனூர் சுமார் 40 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. நாங்கள் காய்கறி வாங்குவதற்காக கடைக்கு போனோம். சம்பவம் நடந்த ரோடு கிழக்கு மேற்கு ரோடு. கோவிலுக்கு முன்னால் சம்பவம் நடந்தது. கோவிலுக்கு தெற்கு பக்கத்தில் சம்பவம் நடந்தது. நாங்கள் வீட்டிலிருந்து கிளம்பியபோது மாலை 4 மணி. எங்கள் வீட்டிலிருந்து அந்த கோவில் சுமார் 50 மீட்டர் தூரத்தில் இருந்தது. எங்கள் வீட்டிலிருந்து அந்த இடத்திற்கு சுமார் 5 நிமிடத்தில் வந்துவிடலாம். என் மாமா மதுரைவீரன் பார்த்திபனூர் ஊராட்சியில் துப்புரவு பணியாளராக வேலை செய்கிறார். எங்கள் மாமாவிடம் சென்று விவரம் சொல்லியபோது மாலை 5 மணி இருக்கும். சம்பவம் நடந்த மறுநாள் DSP என்னை விசாரித்தார். அஜித் என் மாமா பையனின் இடது தோள்பட்டையில் அடித்ததாக DSP விசாரித்தபோது நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பாலகிருஷ்ணன் என் மாமா

மதுரைவீரனின் வலது தோள்பட்டையில் ஓட்டால் தாக்கியதாக DSP விசாரித்தபோது நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லபடும் இடத்திலிருந்து காவல்நிலையம் சுமார் 500 மீட்டர் தூரத்தில் இருந்தது. சம்பத்திற்கு பிறகு நாங்கள் காவல்நிலையம் செல்லவில்லை. போலீசார் மறுநாள்தான் வந்தார்கள். புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். என் மாமா சொல்ல சொல்ல ஐயனார் என்பவர் எங்கள் வீட்டில் வைத்து புகாரை எழுதினார். புகாரை எழுதியபோது காலை நேரம். புகாரை காவல்நிலையத்தில் கொடுத்தபோது பகல் 12 மணி இருக்கும். புகார் கொடுக்க நான் உடன்செல்லவில்லை. புகாரை என் மாமா கொடுத்தார். புகார் காலை சுமார் 10 மணியளவில் எழுதப்பட்டது. புகாரின் விவரங்கள் எனக்கு தெரியும். எங்கள் ஊரில் தங்கவேல் என்பவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என்னுடைய மாமா குடித்துவிட்டு ஊராட்சியில் உள்ள துப்புரவு பணிகளை செய்யாமல் இருந்து வந்தார் என்றும், அது சம்பந்தமாக எதிரிகள் தரப்பினரும், பொதுமக்கள் சிலரும் ஊராட்சி மன்றத்தில் புகார் அளித்து பிரச்சனை இருந்து வந்தது என்றும் சொன்னால் சரியல்ல. தங்கவேலுக்கு எதிராக ஊராட்சி மன்ற தேர்தலில் எதிரிகள் தரப்பினர் வேலை செய்தார்கள் என்றும், தங்கவேலின் தூண்டுதலின் பேரில் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாருக்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் மாமாவுக்கும், மாமா பையனுக்கும் வெளிகாயங்கள் இருந்தது. உள் காயங்களும் இருந்தது. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எனக்கு எந்த சம்பவமும் நடக்கவில்லையென்றும், நான் சொன்னது மாதிரி எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில்

முதலில் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் பாதகமாக இருக்கும் என்பதால் அதை போலீசார் மறைத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் மாமா கேட்டுகொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 4, 7,8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–(5,6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்பதாக 1 முதல் 4,7,8 எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.)**

Taken down to my dictation, in my presence
and hearing and under my personal direction
and superintendence and interpreted to the witness
in the presence of the accused and admitted to the
witness to be correct.

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)